**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No: CC. 88/2022**
**Prosecution Witnesses :1**

| | | | |
|---|---|---|---|
| Name | : **தங்கபொன்னு** | Caste | : |
| Father 's Name / Husband Name | : **ஆறுமுகம்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர் இல்லை)
**(12.03.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது பெருங்குடியில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரி எனது அக்கா மகன் ஆவார். நானும் எதிரியும் தற்போது சமாதானம் ஆகிவிட்டோம். நான் கடந்த 28.04.2021 அன்று இரவு சுமார் 7.00 மணியளவில் நானும் எனது கணவரும் வீட்டின் வெளியே பேசிக் கொண்டிருந்த போது யாரோ ஒரு நபர் என்னையும் எனது கணவரையும் அசிங்கமாக பேசி அடிக்க முற்பட்டார்கள். அந்த சண்டையில் நான் தடுமாறி கீழே விழுந்துவிட்டேன். அதில் எனது ஜாக்கெட் கிழிந்துவிட்டது. அடையாளம் தெரியாது நபர் ஓடிவிட்டார். இருட்டாக இருந்ததால் யார் என்று தெரியவில்லை. என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையெழுத்தும் என்னுடையது தான். **சந்தேகத்தின் அடிப்படையில் எதிரி மீது நான் கொடுத்த புகார் அ.சா.ஆ.1 ஆகும்**. போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.** இல்லை

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No: CC. 88/2022**
**Prosecution Witnesses :2**

| | | | |
|---|---|---|---|
| Name | : ஆறுமுகம் | Caste | : |
| Father 's Name / Husband Name | : குருசாமி | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர் இல்லை)
**(12.03.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது பெருங்குடியில் குடியிருந்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது மனைவி ஆவார். நானும் எதிரியும் தற்போது சமாதானம் ஆகிவிட்டோம். நான் கடந்த 28.04.2021 அன்று இரவு சுமார் 7.00 மணியளவில் நானும் எனது மனைவியும் வீட்டின் வெளியே பேசிக் கொண்டிருந்த போது யாரோ ஒரு நபர் என்னையும் எனது மனைவியையும் அசிங்கமாக பேசி அடிக்க முற்பட்டார்கள். அந்த சண்டையில் எனது மனைவி தடுமாறி கீழே விழுந்துவிட்டார். அதில் எனது மனைவியின் ஜாக்கெட் கிழிந்துவிட்டது. அடையாளம் தெரியாது நபர் ஓடிவிட்டார். இருட்டாக இருந்ததால் யார் என்று தெரியவில்லை. போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.** இல்லை